## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 360/2019 P.W.1 / LW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | லெட்சுமி | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.07.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன சவுரிராஜன் எனது அப்பா ஆவார். கடந்த 10.09.2019 ஆம் தேதி நான் வீட்டில் இருந்தபோது காலை 10.00 மணியளவில் எனது அப்பா சவுரிராஜன் சைக்கிளில் செல்லும்போது மன்னார்குடி தெற்கு வீதி சந்திப்பு வளைவில் சென்றபோது ஒரு கிரைண் வாகனம் எனது அப்பா மீது மோதிவிட்டதாக எனக்கு தெருவில் உள்ளவர்கள் தகவல் சொன்னார்கள். நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தேன், அப்போது எனது அப்பா சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார். இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் நான் ஒரு புகார் மனு கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மறு நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை** : **குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 360/2019 P.W.2 / LW5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **கண்ணன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.07.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை காவல்நிலையத்திற்கு வந்தபோது போட்டுக்கொடுக்கச்சொன்னார்கள், போட்டுக்கொடுத்தேன். ( **மேற்படி கையொப்பம் அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார் . இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு விசாரணை**

விசாரணையிலும் , வாக்குமூலத்திலும் கடந்த 10.09.2019 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு வழக்கின் புலன் விசாரணை அதிகாரியால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்த பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் சாட்சி **ராஜகோபால்** என்பவருடன் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக, வழக்கின் உண்மை நிலையை மறைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு சாதகமாக நேரிட்டு பார்த்த விவரத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறனே் என்றால் சரியல்ல..

**குறுக்கு விசாரணை :** **குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் :**

குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 360/2019 P.W.3 / LW6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **ராஜகோபால்** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.07.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் எனது கையொப்பம் எதுவும் இல்லை. நான் மருந்து கடை நடத்தி வருகிறேன். விபத்து நடந்ததை நான் நேரிட்டு பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார் . இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு விசாரணை**

விசாரணையிலும் , வாக்குமூலத்திலும் கடந்த 10.09.2019 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு வழக்கின் புலன் விசாரணை அதிகாரியால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்த பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் சாட்சி **கண்ணன்** என்பவருடன் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக, வழக்கின் உண்மை நிலையை மறைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல..

**குறுக்கு விசாரணை** : **குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்** :

குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.